உ
சிவமயம்



# செல்வக்குமாரநாதம்


07.04.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் இருபாலை கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் பூநகரி செட்டிக்குறிச்சி,வன்னேரிக்குளம் வேரவில் (ஈழவூர்) வசிப்பிடமாகவும் கொண்ட சைவசமயக்குரு குடித்தோன்றலும் நல்ல தண்ணீர்க்கட்டு முனியப்பரை தன் குலதெய்வமாக கொண்டவரும் ஆகிய

# அமரர் குமாரசாமி செல்வலட்சுமி

**அவர்களின் சிவபதப்பேறு குறித்த**

# "செல்வக்குமாரநாதம்"

## 2022.04.07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"காற்றாகிப் போன பின்பும்
காகிதத்தில் எழுத்துக்களாய் நீங்களே"

அன்பின் அணிகலனாய் பண்பின் சிகரமாய் அறிவின் ஊற்றாய் ஆற்றலின் கீற்றாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் உடன் பிறப்புக்கள் பரிவுடன் கணவர், உற்றார் ,உறவினர்கள்,அயலவர்கள், நண்பர்கள் ,ஊரவர்கள், பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டபிள்ளைகள் அனைவருக்கும் நல்வழி காட்டியாகத் திகழ்ந்து நல்லுலகம் போற்றிடவே பாங்காய் அரிய பல பணிகள் செய்து இனி பூவுலக வாழ்வு போதும் என எண்ணி இறைவனடி சேர்ந்த எங்கள் அனபுருவான அம்மாவே ஆறாக்கவலையோடு உங்கள் பாதம் பணிந்து கண்ணீரால் உம்பாத கமலக் கழுவி சமர்ப்பணம் செய்கின்றோம். உங்கள் ஆத்மாதிருக்கைலாய நாயகிஉடனுறை திருக்கைலாயன் திருப்பாதங்களைச் சென்றடைய எம்மால் இயன்ற பிரார்த்தனைகளை செய்து "செல்வக்குமாரதீபம்" என்னும் வழிபடு நூலைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தாயின் மடியில்
06.03.1939

தேகவியோகம்
07.04.2022

அமரர்


# செல்வலட்சுமி குமாரசாமி

அவர்களின் திதி நிர்ணய வெண்பா

பேசுமொரு பிலவமதில் பேர்மாதம் பங்குனிமேல்
தேசுமரு தீதிவளரும் ஷஷ்டிதனில் –வீசுபுகழ்
செல்வமுயர் செல்வலட்சுமி குமாரசாமிமனை
நல்லதரும் வீடுற்றார் நயந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான் - விநாயகனே
வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அந்த ணாளனும் னடைக்கலம் புகுத
லவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன் றனாருயி ரதனை
வல்வினாய்க் குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியி
லிவன் மற்றே ன்னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடிய டைந்தேன்
செழும் பொழி ற்றிருப்புன் கூருளானே

## திருவாசகம்

என்னால் அறியாய் பதந்தந்தாய்
யானத றியாத கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவில்லை
உடையாய் அடிமைக்(க்கு) யாரென்பேன்
பன்னால் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியரொடுங் கூடா(து)
என்நாயகமே பிற்பட்டு இங்கிருந்தேன்
நோய்க்கு விருந்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எங்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

நன்னினர்க்கினியாயோலம் ஞானநாயகனேயோலம்
பண்ணவர்க்கிறையேயோலம் பரஞ்சுடர் முதலேயோலாம்
எண்ணுதற்கரியாயோலாம் யாவையும் படைத்தாயோலம்
கண்ணுதற் பெருமான்நல்கும் கடவுளே யோலம் ஓலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தென்குறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரிகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மநுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

# அமரர் குமாரசாமி செல்வலட்சுமி அவர்களின் வரலாற்றுப்பதிவு

நல்ல தண்ணீகட்டு முனியப்பர் ஆலய தர்மகர்த்தா முனியாடி சுப்பையா (பரம்பரை) சின்னத்தங்கத்தின் அன்பு மகளும் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான முதன்மை அறங்காவலரும் துத்தியில் ஐயனார் ஆலய தர்மகர்த்தாவும் ஆகிய அமரார் குமாரசாமி ஐயா அவர்களின் அன்பு மனைவியும் வன்னேரிக்குளம் வன்னேரீஸ்வரி உடனுறை வன்னேரீவரர் சிவன் கோயிலின் ஆதீன கருத்தாவும் ஆகிய குமாரசாமி செல்வலட்சுமி அம்மா அவர்களின் வரலாற்றுப்பதிவு.

திருமூலரால் சிவபூமி என சிறப்பிக்கப்பெற்றது, இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் இலங்கை திரு நாட்டிலே வளம் பல கொண்ட யாழ்ப்பாணம் இருபாலை கட்டபிராயப்பதி பல சிறப்புக்கள் அமைந்த பதியாகும். சைவ மணம் மலரும் சைவாலயங்கள், சமயப்பெரியார்கள், சைவ குருமணிகள், நீர்வளம் நிலவளம், கற்றாங்கு ஒழுகுவோர், புராணபடனவித்தகர்கள், கல்வி மான்கள், தென்னை, பனை, கமுகு, மா, பலா, வாழை, முக்கனிகள் செம்மைத்திறனுடன் கொண்டமைந்த மண்ணிலே சுப்பையயா (சுப்பிரமணியம்,சின்னத்தங்கத்திற்கு 06.03.1939ம் ஆண்டு ஐந்தாவது செல்வப்புதல்வியாக ஜெனனமாகி செல்வலட்சுமி என்று நாமஹரணமும் பெற்றுக்கொண்டவர் தான் அம்மா, சின்னா என்ற செல்லப்பெயரும் சிறப்புற அமைந்தது

ஒன்பது பிள்ளைகளும் ஒன்றாய்செல்வமாய் வளர்ந்து வரும் காலத்தில் சிறு வயதில் மூத்தசகோதரன் இரு சகோதரிகள் நோய்கள் தாக்கத்தால் சிவனடி சேர்ந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசா,மனோன்மணி,சபாரத்தினம் லீலாவதி,அன்னலட்சுமி ஆகியோர், சகோதரர்களாகவும் அமைந்தனர்.

இளமைக்காலத்தில் தந்தையின் வழி விவசாயத்தை மேற்கொண்ட காரணத்தினாலும் பூசை வழிபாடுகள் தொடர்பாலும் பூநகரி செட்டிய குறிச்சியில் குடியமர்ந்தனர். நல்லதண்ணீர்கட்டு முனியப்பர் இவர்களின் குலதெய்வம், திகிரி விநாயகர் செல்வியாதிவுஅம்மன், முத்துவைரவர் ஆகிய ஆலயங்கள் இவர்களின் வழிபடுதெய்வாலயங்களாக அமைந்தது சிறப்பாகும்

இளமைக்கல்விக்காலம் ஆரம்பமாக செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்று வந்தார். தந்தையரின் விவசாயத்தொழலில் நிமித்தமாக வன்னேரிக்குளம் குடியேற்ற ஆரம்பகுடியிருப்பாளராக வன்னேரிக்குளம் 2 ஏக்கர் திட்டத்தில் குடியேறினார். தந்தையாரின் "உழுதுண்டு வாழ்வாரே மற்று எல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"என்ற குறளுக்குஅமைய பெரும் விவசாயச்செய்கையில் அனைவரும் ஈடுபாடு கொண்டனர். இடைநிலைக்கல்வியை வன்னேரிக்குளம் அ.த.க. மகாவித்தியாலயத்தில் (இப்போது ம.வி)கற்றார்.

**இல்லறம்** மணப்பருவம் வயதினை அடைந்ததும் தாய் தந்தையாரினது செல்ல மகளாக திகழ்ந்தவர்.சகோதர சகோதரிகளும் இவர் மீது இளமை தொடக்கம் **"சின்னக்கா"** என்று அழைப்பதும் அவர்களின் இனிமையான அழைப்பும் தனித்துவமானது ஈழவூர், வேரவில் சைவக்குடித் தோன்றல் பூசைப் பரம்பரையினர் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையாரை முன்னவனாகக் கொண்டு பூரணா புஸ்லா உடனுறை துத்தியில் ஐயனாரை குல தெய்வமாக வழிபடும் பரம்பரையும், விவசாயத்தொழில் மீதும் மேன்மை உடைய கதிரவேலு,சிதம்பரம் தம்பதியினர் பெற்றெடுத்த ஆண்வாரிசின் வரிசையில் மூத்த மகனும் பண்பானும் சமூக சேவையாளனும்,புராண படன வித்தகர்,அதீதபக்தி மான்,கல்விமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மதிப்புக் கொண்ட குமாரசாமி என்று பெயர் கொண்ட மணவாளனை பெரியோர்கள் நிச்சயித்து திருமணபந்தத்தில்1955 ஆண்டு இணைத்து வைத்தனர். இருவரும் பூவும் மணமும் போன்ற இவ்வாழ்க்கையை இனிதே நடாத்திவரும் காலத்தில் ஏழு ஆண்மகன்களைப் பெற்றெடுத்தனர். சுமுகலிங்கம், வரதராஜன், சண்முகலிங்கம், யோகராசா,கதிர்வேற்பிள்ளை, சண்முகதாசன், பரமநாதன் ஆகிய நாமங்களையிட்டு கட்டுக்கோப்பான சீரிய நன்மக்களாக வனப்புற வளர்த்து வந்தனர்.துத்தியில் ஐயனார் ஆலயம் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப்பிள்ளையார் ஆலய திருப்பணி வேலைகள், பூசைகள் விழாக்கள் நிறைவுபெற தன்னால் இயன்றளவு அரிய பணியாகச்செய்தார். தன் குல தெய்வமாகிய முனியப்பர் ஆலய சைவ வழிபாடுகளுக்கு என தனது பெற்றோரால் கொடுக்கப்பட்ட பூமியை ஆலய பராமரிப்புக்கெனகொடுத்து தனது சிவப்பணியை நிறைவாக்கினார்.பல்லவராயன் கட்டு, வெள்ளாங்குளம் பள்ளமடு,திக்குல்வில ஆகிய சிவாலயங்கள் அமைப்பதற்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி அமைப்பித்தார்.

### பிள்ளைகளின் வாழ்க்கை, கல்வி-

மூத்தமகன் கு,சுமுகலிங்கம் அவர்கள் கிளி வேரவில் இ.ம.வி, யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராக்கியும், தொடர்ந்து சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர், போன்ற சமயத்தின் உயர்நிலைபரீட்சைகளில் தோற்றி பட்டங்கள் பெறச்செய்தார்.தஞ்சாவூர் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் B.A, தமிழியல், யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தின் முதுகலைமாணி(MA) சைவ சித்தாந்தம் வரை கற்பித்து பட்டமளிப்பு விழாவிலும் இருவரும் மகிழ்ந்து இருந்தானர்.

இவர் சரசாலை வைத்திலிங்கம் அவர்களுடைய மகள் இரத்தினேஸ்வரி அவர்களை திருமணம் செய்து சிவசிறி குருவரதன் அபிஷேகசாயினி, ஆகிய இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகன் வரதராசன் ஆரம்ப இடைநிலைக் கல்வியை வேரவில் இந்து ம.வித்தியாலயத்தில் கற்று தொடர்ந்து ஒரு பெரும் வியாபாரியாக,விவசாயியாக சிறப்படைந்தார் மீசாலையைச் சேர்ந்த தம்பையா தம்பதிகளின் மகள் வசந்தமலர் அவர்களை திருமணம் செய்து அகிலன் கல்பனா எனும் இரு பிள்ளைகளைப் பெற்று அமரர் ஆயினார். (1987)

மூன்றாவது மகனான சண்முகலிங்கம் ஆரம்ப இடைநிலைக்கல்வியை வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கற்று வியாபாரத்தொழில் செய்கின்றார் தனது மாமன் சோமசேகரம் அவர்களின் மகளான பாக்கியலட்சுமியை திருமணம் செய்து ஹரிகரன் (அமரர்) கஸ்தூரியை பெற்று வாழ்ந்து வருகின்றார்.

நான்காவது மகன் யோகராசா கல்வியை வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கற்றார் கமத்தொழில் செய்து வருகின்றார். அவர் வரணியைச்சேர்ந்த நடராசா தம்பதிகளின் மகள் மனோகரியை மணம் செய்து ஐங்கரன்,ஷர்வானிக்கா எனும் இரு பிள்ளைகளைப் பெற்று விநாயகர் பணியையும் பார்த்து சிறப்புற வாழ்ந்து வருகின்றார்.

ஐந்தாவது மகனான கதிரவேற்பிள்ளை வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கற்று கமத்தொழில் செய்து வருகின்றார். அவர் முழங்காவிலைச்சேர்ந்த பொன்னுச்சாமி தம்பதிகளின் மகள் மருத்துவ தாதியான சாந்தி அவர்களை (அமரர்) மணஞ்செய்து விஸ்ணுகாந்த், ஹேமகாந்த், விமல்காந்த் மூன்று புத்திரர்களைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

ஆறாவது மகனான சண்முகதாஸன் கல்வியை வேரவில் இந்து மகாவித்தியாலயத்திலும்:, யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியிலும் கற்று பூநகரி பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் பணிபுரிந்தார் இப்போது சுயதொழில் வியாபாரம் ,கமம் என்பவற்றில் ஈடுபட்டுவருகின்றார். அவர் பூநகரியைச்சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் மகள் தேவகியை மணம் செய்து கேனுஜா,கேனுஜன் ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

கனிஸ்ர புத்திரன் பரமநாதனும் வேரவில் இந்து மகாவித்தியாலயம் மற்றும் யாழ்/ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கல்வியைப் கற்று கமம் மற்றும் வியாபாரத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். அவர் தொண்டமனாறைச்சேர்ந்த இராசகுரு தம்பதிகளின் மகள் ரஞ்சினியை திருமணம் செய்து கயானந்த வதனி,துஷ்யந்தன், கஜவதனா ஆகிய மூன்று பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

இவ்வண்ணம் குடும்பம் பிள்ளைகள் சமூகம் சமயம் தமிழ் என வாழ்ந்து தனது 83 ஆவது வயதில் (07.04.2022) இவ்வுலகை நீத்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார். அன்னாரின் ஆத்ம சாந்தி அடைவதாக

2012ம் அண்டு ஆனி 25ம் திகதி குமாரசாமி அவர்கள் இறைபதம் அடைந்தார்.அதன் பின் தொடர்ந்தம் வெள்ளிக்கிழமை பிள்ளையார் ஐயனார் ஆலயங்களிற்கு பூசைப்பொருட்கள் கொடுத்து அவர் பணியை செய்வித்து வந்தார்.2014ம் ஆண்டு மீண்டும் பிள்ளையார் ஆலயத்தில் தேர்த்திருப்பணிகள் செய்வதற்கு ஆலோசணை கூறி நெறிப்படுத்தினார்.அதன் வழி மகோற்சவம் யுத்தகாலத்துக்கு பின்னர் ஆரம்பமாகி நிறைவாக நடத்த வழி நடத்தினார். 2019ம் ஆண்டு பஞ்சமுக விநாயகர் எழுந்தருளி இந்தியாவில் இருந்து கொண்டு வந்து இரதோற்சவம் நிறைவாக நடத்த நெறிப்படுத்தியமை மறக்கமுடியாது. உறவுகள் பேரப்பிள்ளைகள் பூப்புனித நீராட்டுவிழாக்கள் பூநூல்சடங்கு திருமணங்கள் அனைத்தும் பார்த்து பெருமகிழ்ந் திருந்தார்.

**பேரப்பிள்ளைகளின் வாழ்க்கை.கல்வி**

வரதராஜன்,அகிலன் கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயம்,யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி ஆகியவற்றில் கற்று இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sotologic (முகாமையாளர்) கிளிநொச்சியில் பணியாற்றி வருகின்றார்.திருமணத்தை மீசாலை யோகேஸ்வரன் அமிர்தபசனி தம்பதிகளின் மகள் கேமறஞ்சினியை மணம் முடித்து ஆரங்கன்,ஆருரன்,அபிசனா ஆகிய மழலைச்செல்வங்களைப்பெற்று இனிதே மகிழ்வுடன் வாழ்கின்றார். வரதராஜன்,கல்பனா கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலயம், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கற்றுத் தேர்ந்து BA பட்டம் பெற்று ஆசிரியரானார்.பரந்தன் யோகராசா வத்சலாதேவி தம்பதிகளின் இளையமகன் ஹரிகரன் (BA பட்டம்) ஆசிரியரைத் திருமணம் செய்து ஆதீசன்,ஆருஷா ஆகிய மழலைகளைப் பெற்று சிறப்புற வாழ்கின்றார்.

சுமூலிங்கம் ஹருவரதன் கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலயம் யாழ்/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்று இப்போது குருக்களாக சைவசமயப்பணிகள் செய்து வருகின்றார். வரணியூர் குருக்கள் குடியிருப்பு சிதம்பரநாதர் மணிக்குருகள் பரமேஸ்வரி அவர்களின் செல்வமகள் சுயந்தினி அவர்களைக்கரம்பற்றி சிவாச்சாரியார்யாபிசேகம் நிறைவாகி குருக்கள் ஆக வன்னிப்பெருநிலப்பரப்பில் பணிபுரிகின்றார். இவர்களும் ஆதினி என்னும் மழலைச் செல்வம் பெற்று வாழ்கின்றனர். கதிரவேற்பிள்ளை விஸ்ணுகாந் கிளி/ முழங்காவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றார். மட்டக்களப்பு சிவானந்த தேசிய பாடசாலையில் கல்வி கற்றார்.குமாரசாமி ஐயாவின் சிவாலயக்கிரியைகளைச் சிரமேற் கொண்டு ஆலய பூசகராக பணிபுரிகின்றார்.கதிரவேற்பிள்ளை, ஹேமகாந் அவர்கள் லண்டனில் கல்வி கற்று வருகின்றார். கதிரவேற்பிள்ளை விமல்காந் கிளி/ ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றார்.

சண்முகதாசன் கேனுஜா அவர்கள் கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்துக்கல்லூரியில்கல்வி கற்று தனியார் கம்பனியில் பணியாற்றி வருகின்றார். சண்முகதாசன் கேனுஜன் பம்பலப்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துகல்லூரியில் கல்வி கற்று தனியார் கம்பனியில் பணிபுரிகின்றார்.பரமநாதன் கஜானந்தவதனி துஷியந்தன் கஜவதனா ஆகியோர் கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். சண்முகலிங்கம் கஸ்தூரி கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். அம்மா அவர்களின் உடல் நிலை தளர்வுற்றது வயதின் காரணமாக ஏற்படுவதாக வைத்தியர் கூறிய ஆலோசனைக்கமைய இயன்றளவு பராமரிப்பு செய்து வரும் போது தன் கடமைகளை தானாகவே இறுதி வரை செய்து வந்தார். இக்காலத்தில் 2018ம் ஆண்டு இவர் வளர்ந்த மண் வன்னேரிக்குளததில் தல வன்னேரிஸ்வரி உடனுறை வன்னேரீஸ்வரர் சிவன் கர்ப்பக்கிரகப் அமைத்து வழிபடுவோரிடம் கொடுக்கும் பாக்கியம் இவருக்கு கிடைத்தது. இவர் மூலமாகயமைய கொடுத்த ஆலயம் இன்று மக்களின் பேருதவியுடன் பெருவிருட்சமாக வளர்ந்து வருகின்றது வன்னேரி வாழ் மக்கள் அனைவரும் போற்றி துதி செய்யும் சிவாலயமாக மிளிர்கின்றது.
செல்வலட்சுமி அம்மா அவர்களின் பிறப்பு சிவன்பணிக்கென பிறந்தார் எனப்பலரும் போற்றும் பேறு பெற்றார்.

இறுதிக்காலத்தில் நான் இப்படி ஏன் சும்மா இருக்கவேண்டும் என்று என்னிடம் அடிக்கடி கூறுவார் வயது சென்றால் என்ன செய்வது என்று ஆறுதல் கூறுவோம் இவ்வாறு இருக்கும் போது உடல்நிலை தளர்வுற்றது கண்டு எல்லோரும் கலங்கி நின்றனர் இருப்பினும் உடன்பிறப்பு சின்னான் தனது சகோதரியை பிரிய மனமின்றி அருகில் இருந்தார் இவ் வேளை காலன் தன் கடமையை செய்ய எண்ணிணான் 07.4.2022 அன்று சிவனும் அழைக்க அனுமதி கொடுத்தான் சின்னன் காதினுள் சிவநாமம் சொல்ல சொல்ல... சிவனின் திருப்பாதங்கள் சென்றடைந்து விட்டார்.

ஓம் சாந்தி!!! சாந்தி!! சாந்தி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் முழங்காவில்**

**சிவப்பிரம்ம பூஷணம் ,சிவநெறிக்காவலர் சிவானந்த சாகரம் தேசமானிய சிவஸ்ரீ செ. தெட்சனாமூர்த்திக்குருக்கள்**

**இரங்கற்செய்தி**

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்றுஎன்ற வள்ளுவர் குறளுக்கு எடுத்துக்காட்டாக தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு இவ்வுலக பணி நிறைவுற்று அவ்வுலக பணிக்காக இறைவன் அழைத்துக் கொண்டான் இதுவே வாழ்வின் நியதி

அமரர் அதற்கமைய வேரவில் பதிவாழ் அமரர் சிவத்திரு திரு குமாரசாமி அவர்களின் துணைவியார் செல்வலட்சுமி அவர்கள் வெள்ளிப்பள்ளத்து விநாயகனிடம் பக்தி மிகுந்தவர். திருப்பணி களில் சகலவிதமான தொண்டுகளையும் பிள்ளைகள் கணவருடன் சேர்ந்து சிறப்புற செய்து செய்வித்து, அனைவரிடமும் மிகுந்த பாசத்துடனும் பரிவுடனும் பாதுகாத்து வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமி திருமதி குமாரசாமி செல்வலட்சுமி அவர்களின் இழப்பு குடும்பத்தினருக்கு பேரிழப்பாகும்.

இறைவன் மனச்சாந்தியை அளிக்க வேண்டும் எனப்பிரார்த்திப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவனுடன் கலந்து பேரின்பம் அடைய வேண்டும்: என எல்லாம் வல்ல அருள்மிகு முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு குருக்கள்

**சிவஸ்ரீ செ. தெட்சனாமூர்த்தி**

**NO- 6 மயூராபதி ஜோதிட நிலையம்**

**ஜயா வீதி சிவன் கோயிலடி சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிற் பெருந்தக்கவள்

தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகிற் என்று பெரியவர்கள் கூறுவார்கள் தெய்வத்தின் கருணை கிடைத்து விட்டால் மனிதன் மண்ணில் நல்லவண்ணம் வாழமுடியும்.இத்தோடு முயற்சி திருவினையாக்கும். என்பதற்கமைய வாழ்ந்த பெருந்தகை அமரர் குமாரசாமி செல்வலக்சுமி அவர்கள் பிறந்து மொழிபயின்று தாய் தந்தையருக்கு ஒழுக்கமுள்ள பண்புள்ள பிள்ளையாக மட்டுமன்றி சமுதாயத்தோடு ஒட்டி உறவாடி வாழ்ந்த அம்மையார் குமாரசாமியை திருமணம் செய்த காலத்திலிருந்தே கணவனையும் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வாழ்ந்து வந்தார்.

மனிதனைப்போன்று உயர்ந்த செல்வம் கிடையாது என்பதைப்போன்று ஏழு ஆண்பிள்ளைகளைப்பெற்று அவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களைப் பயிற்று வித்துவபண்போடும் கடவுள் பக்தியோடும் வாழ வளர்த்தெடுத்த பெருந்தகை குமாரசாமி செல்வலட்சுமி ஆவார். கணவன் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகனின் பூசைகளை நடத்தும் கால்தானும் அதற்கு பக்கபலமாக நின்று பெரும்பணிகளை ஆற்றியவர். இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவற்கும் நல்லாற்றில் நின்ற துணை என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய பிரமச்சாரிகளையும், துறவிகளையும்,சந்நியாசிகளையும் போற்றும் திறன் வாய்ந்தது. பொன்னாவெளி உடையாரால் ஆரம்பித்து நடத்ததப்பட்டு வந்த திருக்கேதீஸ்வரம் நோக்கிய பாதயாத்திரை குழுவினர் தம் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகை தரும் காலத்தில் அவர்கள் ஒவ்வொருவரையும் சிவனடியார்களாகவே மதித்து ஊரவர்களையும் இணைத்து அவர்களுக்கு வேண்டிய காலை உணவுகளை மகழ்வுடனே முற்கூட்டியே தயாரித்து கணவனுடன் இணைந்து அவர்களிற்கு விருந்தளித்து வந்தமையை சிறுவனாக இருந்தபோது நேரில்பார்த்து இன்புற்றிருக்கின்றேன்.யுத்தத்தின் பின்பு இவரின் மூத்த மகன் சைவப்புலவர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் சிவாச்சாரியார் இப்பாத யாத்திரையைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றார். என்றால் அம்மையார் தம்மக்களை எவ்வளவு தூரம் பண்புள்ளவர்களாக வளர்த்து வந்தார்.என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்

தம் பிள்ளைகளை கல்விகற்பிக்கப் பண்ணி பல்கலைக் கழகத்தில் B.A M.A பட்டங்கள் வரை பெறுவதற்கு வழிகாட்டியாக வாழ்ந்த அம்மையார் தம் பிள்ளைகள் உயர் உத்தியோகங்கள் விவசாயம்,வியாபாரம்,யந்திரவாகனதொழில்கள் வகிப்பதைக் கொண்டும் மனநிறைவு பெற்று வாழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு பருவத்தே பயிர் செய்விப்பது போல திருமணங்களையும் உரிய காலங்களில் நிகழ்வித்து அவர்களும் மகிழ்வாக இல்லற வாழ்வை நிகழ்த்தவும் பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தும் தம் பேரப்பிள்ளைகளை நன்னெறியில் வளர்ந்துவர அன்புவார்த்தைகளையும் ஆரோக்கியமான கதைகளையும் கூறுவதோடு அவர்களின்கல்வி கேள்விகள் சிறந்து வளரவும் பெரும்துணையாக இருந்தார்கள்.

தம் ஆலயத்தில் பல தொண்டுகளை ஆற்றி வருதோடு ஆலயத்திற்கு வருகை தரும் சிவாச்சாரியார்கள் மங்கல வாத்தியக்கலைஞர்கள், சொற்பொழிவாற்ற வருகை தரும் பேராசிரியர்கள்,சைவப்புலவர்கள் சைவசித்தாந்த பண்டிதர்களையும் பண்போடு வரவேற்று உணவு,சிற்றுண்டிகள் வழங்கி விருந்தோம்பும் பண்பை இன்றும் மறக்க முடியவில்லை.

அன்னார் ஈழத்தின் பல பாகங்களிலும் உள்ள ஆலயங்கள் தோறும் சென்று வழிபாடாற்றுவதும் தம் குல தெய்வங்களை மறவாது வாழ்ந்தமையும் 83 வயது வரை வாழ்ந்திருக்கின்றார்கள் என்றால் அவர்களது தெய்வீக பக்தியும் சமூக உறவாடலும் ஓயாத உழைப்பும் அவரை வாழ வைத்துள்ளது .பூவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையார் வானுறையும் தெய்வத்துடன் இணைந்து வாழப்பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்**
**தேர்வுச்செயலாளர்**
**சைவ சொற்பொழிவாளர்**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், யாழ்ப்பாணம்.**

**அருட்சொல்வாரி**
**செஞ்சொற் செல்வர்**
**சைவசித்தாந்த கலாநிதி**
**சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்(J.P)**
**B.A.,(HONS) M.A,PGDE.SPETRD.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி கந்தையா ஸ்ரீகணேஷன் அவர்களின் இரங்கல் செய்தி

இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் பூநகரி வேரவில் கிராமத்தில் தமது இல்லற வாழ்வை மேற்கொண்ட திருமதி குமாரசாமி செல்வலட்சுமி அம்மையார் அண்மையில் சிவபதப்பேறு அடைந்தமையை ஒட்டி வெயிடப்படும் நூலுக்கு அஞ்சலிக்குறிப்பு எழுதுவது ஒரு பாக்கியம் ஆகும்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடையமூவாக்கும்:
நல்வாற்றின் நின்ற துணை"

எனும் வள்ளுவர் வாக்குக்கு இணங்க இல்லறத்தில் நின்று கணவருடன் இணைத்துக் கொண்டு தானதருமங்கள் செய்து வெள்ளிப்பள்ளத்து விநாயகர் கோவிலில் திருப்பணிகள் பல நிறைவு செய்யும் பேறுபெற்று நிறைவான வாழ்வை பிள்ளைகளுடன் வாழ்ந்து இறைபதம் நாடினார்.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு"

ஆம் கணவருடன் இணைந்து அவரின் பல்வேறு கிராம சபைத்தலைவர் பணிகளிலும் சமூகப்பணிகளிலும் விருந்தோம்பல் பண்பை கட்டிக்காத்து மண்ணின் மாண்பை உயர்த்திக்கொண்டவர்

வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் கடமை புரிந்த வேளையில் எமது கல்விப்பணிக்கு உறுதுணையாக உணவளித்து எம்மை ஊக்குவித்த பெருமாட்டியார்

பாடசாலைகளில் பணிகளில் கணவர் சிவசிறி குமாரசாமி ஐயாவுடன் இணைந்து எம்மை ஊக்குவித்து எம் வாழ்வை சிறப்பாக்கியவர்.

அவர்கள் புதல்வர்கள் தாய் தந்தை காட்டிய வழியில் கிராமத்தின் ஆன்மீக மற்றும் சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்

"தக்கார்தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

அம்மாவின் ஆத்ம சாந்தி அடைய பிரார்த்தனை செய்த கொள்வோம்.

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேஷன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
ஆங்கில மொழிக்கற்பித்தல்துறை யாழ்ப்பாணபல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
முன்னாள் ஆசிரியர்
கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி செல்வலட்சுமி குமாரசாமி அவர்களின் வாழ்க்கை பாதையிலே......................

இந்து மா கடலின் முத்தென சிறப்பிக்கப்படும் இலங்கை திரு நாட்டிலே பார்ப்பவர் கண்களைக் கவரும் பசுமை மிகு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி கிராமத்தில் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. எழில் மிகு வேரவில் கிராமம் இக்கிராமம் இயற்கை அழகோடு நீர்வளம் நெல்வளம் தென்னை வளம் கடல்வளம் காட்டு வளம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீர்வேலியைப்பிறப்பிடமாகக் கொண்டுள்ள திரு குமாரசாமி அவர்களுக்கும் 06.03.1939 ம் திகதி கட்டைப்பிராய் இருபாலையில் பிறந்த செல்வலட்சுமி அவர்களிற்கும் 1955ம் ஆண்டு திருமுணம் நடைபெற்று வேரவில் கிராமத்தில் அவர்கள் தனது குடும்ப வாழ்வை ஆரம்பித்தனர். குடும்ப வாழ்வில் திரு கு.சுமுகலிங்கம்(ஆசிரியர்) என்ற ஆண்பிள்ளையோடு ஆறு ஆண்குழந்தைகளை பெற்றெடுத்தனர்.ஆண்பிள்ளைகளை கல்வி கேள்வியோடும் சிறந்த பாரம்பரியத்தோடும் சிறந்த நற்குணங்கள் நிரம்பிய பிள்ளைகளை வளர்த்தெடுத்தனர். தங்கள் வீட்டின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள இஸ்டதெய்வமான வெள்ளிப்பள்ளத்து பிள்ளையார் மீது மிக்க விசுவாசமும் இறை நம்பிக்கையோடும்: தினந்தோறும் பூசித்துள்ளனர். திரு குமாரசாமி அவர்கள் அப்போது அர்ச்சகர்களாக அனைத்து நிகழ்வுகளையும் கோயிலில் செய்து வந்தார்கள். அவருக்கு வலது கையாக திகழ்ந்தவர். செல்வலட்சுமி அம்மா அவர்கள் சிறந்த குடும்பத்திற்கேற்ப நற்குண நற்செய்கைகள் அனைத்தும்: நிரம்பப்பெற்று வந்தோரை உபசரித்து இன்மொழி பேசி வரவேற்பதில் சமத்தராகவும் விளங்கினார்.

1984ம் ஆண்டு வேரவில் இ.ம இன் கடமை யேற்றேன். அப்போர்து என்னுடன் திரு.க. சிறிகணேசன்(ஆங்கிலம்) திரு ஞ.சிவானந்தன்(கணிதம்) திரு செ.விநாயக மூர்த்தி(விவசாயம்)திரு ஞ,சிதம்பரநாதன்( தமிழ்) செல்வி ஜெயலட்சுமி( விஞ்ஞானம்) செல்வி கனகராணி(மனையியல்) போன்ற சக ஆசிரியர்கள் கடமை ஆற்றினார்கள் இவ்வாறு வெளியிடங்களில் இருந்து இங்கு வந்து சேவை செய்யும் உத்தியோகத்தர்களை அன்புடன் தமது வீட்டிட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச்சென்று உண்டியும் உறையுள்ளும் கொடுப்பதில் வல்லவராக செல்வலட்சுமி (அம்மா) திகழ்ந்தார்கள் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்ற பொன்மொழிக்கமைய வாழ்ந்து காட்டியவர் அவர். இவரது கணவர் திரு குமாரசாமி (ஐயா) அவர்களும் இவரைப்போன்று சுமர்த்தர். அன்றைய நாளில் இருந்து திரு க.சிறிகணேசன் அவர்களும் திரு. சு.சிவானந்தன் அவர்களும் சைவ போசனத்தை அவ்வீட்டில் அருந்தி வந்தார். பாடசாலை விளையாட்டுப்போட்டிகள் கலை விழாக்கள் பரிசளிப்பு விழாக்கள் ஏனைய விழாக்கள் போன்ற நிகழ்வுகளில் பொதுத்தொண்டு செய்வதில் இவர் கணவர் முன்னித்து உழைத்தார்கள் இத்துடன் பரிசுப்பொருட்களையும் கேடயங்களையும் வழங்கி பெற்றோர் மாணவர்களை ஊக்கப்படுத்தி பாடசாலையின் கல்வி நிலைய உயராக்கவும் ஊக்கமும் வழங்கினார் என்றால் மிகையாகாது.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பவா" செல்வலட்சுமி அம்மா வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக மதிக்கப்படுகிறார் அவர் சென்ற 07.04.2022 ம் திகதி அன்று தனது வெள்ளிப்பள்ளத்து பிள்ளையார் அம்மாவின் ஆன்மாவை தன்னுடன் அழைத்து சென்றுவிட்டார்கள்

அவர் வாழ்த காலத்தில் வேரவில் மக்களால் மதிக்கப்பட்டவர் அவர்.

1986ம் ஆண்டு நான் திருமணம் செய்து பாடசாலைக்கு வந்த போது அவர் எங்கள் இருவரையும் தமது வீட்டிற்கு அழைத்து இன் மொழி பேசி விருந்தோம்பியவர் இவ்வாறு மிக்க உயர்ந்த பண்புகள் பொருந்திய செல்வலட்சுமி அம்மா இன்று எங்களோடு இல்லை. இவர் இவ்வுலகை விட்டிரங்கியது அவரது குடும்பத்தினர் பிள்ளைகள் உறவினர்,அயலவர்கள் எல்லோருக்கும் பேரிழப்பாகும். எனவே அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. கணபதிப்பிள்ளை
ஓய்வு நிலை கோட்டக்கல்வப்பணிப்பாளர்
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியைத்தொண்டில் சலியாத மூதாட்டி

## சைவப்புலவர் சங்கம்

எமது சங்கத்தின் சைவபிரசார செயலாளர் சிவத்.திரு.கு.சுமூகலிங்கம் ஐயாவின் தாயார் திருமதி.செல்லலட்சுமி குமாரசாமி அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னார் அன்பும் பண்பும் நிறைந்த மூதாட்டியாவார். பூநகரி வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்திற்கு நாம் சொற்பொழிவு செய்யப்போகும் போது அவரைக் காண்போம். அன்பாகப்பேசி அரவணைத்து விருந்தோம்பல் செய்வதிலே அவருக்கு நிகர்யாருமில்லை. என்று கூறலாம். பிள்ளையார் போல மிகுந்த பக்தி கொண்டு ஒளவையார் போல எப்போதும் சலியாது தொண்டுகள் செய்து கொண்டே இருப்பார். தனது மக்களை நன்றாக வளர்த்து இறைவனுக்கு தொண்டுகள் செய்வதற்கு ஆளாக்கிவிட்டது மட்டுமன்றி தனது கணவர் குமாரசாமி ஐயா விநாயகர் ஆலய திருப்பணிகளை சிறப்பாக செய்யவும் சமயத்தொண்டுகள், சமூகத்தொண்டுகள் செய்யவும் மிகுந்த ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தருந்தவர் அவரது இல்லத்திற்கு சென்றால் யாரும் உணவு உண்ணாது செல்லவிடமாட்டார்கள் ஆலயம் பூசைகள் முறையாக நடைபெறுவதற்கு எப்போதும் உதவி செய்து கொண்டே இருப்பார்.உடல் நோய் வாய்ப்பட்டாலும் இயலாது என்று படுத்து விடாது சலியாது சரியைத் தொண்டுகளைசெய்து கொண்டே இருப்பார் யாராவது பிழைகள் செய்தால் சற்றும் தயங்காது நேரேயே பேசிவிடுவார். திருத்துவார் ஆனால் பின்பு அன்பாகப் பேசுவார் குணத்திலும் தூய்மையுடையவர். அவர் சந்ததியை வாழ வைக்கும் என்பது உண்மை இயற்கை நியதியை யார்தான் வெல்ல முடியும். இவ்வுலக வாழ்வு போதும் என்று எல்லாம் வல்ல விநாயகப்பெருமான். தனது பாதார விந்தத்தில் அன்னாரின் ஆன்மாவை சாந்தியடையச் செய்துள்ளார். என்பதில் ஐயமில்லை சரியைத் தொண்டுடில் சலியாத மூதாட்டியை எப்போதும் நினைத்து நாமும் இறைதொண்டுகள் செய்து உயர் பெறுவோமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இங்ஙனம்

சைவசித்தாந்த பண்டிதர்,சைவப்புலவர்,விரிவுரையாளர்.
சி.கா.கமலநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் உதித்த மனித வடிவத்தெய்வங்கள்

வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுந்து வரும்:
வெள்ளைக்கொம்பன் விநாயகனைத்தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்தவினைகளே

சிவபதப்பேறு பெற்று தேவருலகம் செல்லும் அம்மா செல்வலட்சுமி அவர்கள் அவர் அன்புக்கணவர் அமரர் குமாரசாமி ஐயா புராண படன வித்தகர் அவர்கள் இருவரும் ஸ்நானம் பண்ணி வீபூதி திரிபுண்டரமாகத் தரித்து தென்மராட்சி ஆலயங்கள் வரும் போது இருவரின் காட்சி என் கண் முன் தோன்றுகின்றது.

சிவசக்தி ஐக்கியமாகிய மனம் படைத்தவர்கள் என்ற எண்ணம் என் சிந்தனையில் தோன்றியது, புராண படணம் செய்கின்ற போது குமாரசாமி ஐயாவின் குரல் இன்னும் என் காதில் ஒலிக்கின்றது, திருமுறை முற்றோதல், திருவாசமுற்றோதல், குரல்வளம் அவருக்கு இறைவன் கொடுத்த கொடை. அம்மா அவர்கள் அவர் அருகில் இருந்து நீ ஆகாரம் அடிக்கடி கொடுத்து கவனித்தமை தனித்துவமானது. சிவாலயங்களை அமைத்தல் திருப்பணி செய்தல். பூசித்தல் என்பன இவர்களின் முன்வினையின் பயனேயாகும். தெய்வீக ஒளிவீசும் முகம் இறைவசீகரம் சமூக வசிகரம் என்பன நிறைவானவர்கள் அவர்கள் பிள்ளைகளும் தெய்விகமானவர்களாகவும், பேரப்பிள்ளைகளும் இறைபக்தி குருபக்தி பெரியோர் கனம் பண்ணுதல், என்பன இன்றி அமையாத குணங்களாக அமைந்தமையும் சிவனருளே அம்மா அவர்கள் சிவாத்மா சிவன்கழல் சென்றடையப் பிரார்த்தனை செய்து அனைவரும் ஆறுதல் அமைவோமாக.

திருமதி.கு.கமலாதேவி
தென்மராட்சி இந்து பரிபாலனஅறிவியல் மன்றம்
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் எனக்கும் அம்மாதான்

............................நேற்று போல நினைவில் நிற்கிறது குமாரசாமி ஐயா குடும்பத்தை நேரில் முதல்முறை கண்ட பொழுது. அது 1976 ஆண்டுக் காலம் அன்றைய தமிழ் அரசியல் தலைமையான தமிழர் கூட்டணி கட்சியின் கூட்டத்தில் கலந்து கொள்ள பல்லவராயன் கட்டு பக்கம் அன்றய பாராளுமன்ற உறுப்பினரோடு வந்திருந்தோம். தமிழர் கூட்டணியின் மாவட்ட செயலாளராக இயங்கிய கால கட்டம் கிராம சபைத்தலைவரான குமாரசாமி ஐயா தான் அன்றைய கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். கூட்டம் முடிவில் இவர்கள் இல்லத்திலேதான் எங்களுக்கு சாப்பாடு அன்று ஆரம்பித்த அன்பு பிணைப்பு உறவு இன்றும் தொடர்கிறது. சுமூகலிங்கம் நெருங்கிய நண்பர் ஆனார். அவர் குடும்பத்தோடு நானும் ஒன்றிய ஒருவனானேன். சிறந்த தாயாக அன்பைச்சுரந்த அம்மா குமாரசாமி ஐயாவின்சமய சமூக பணிகளுக்கு சளைக்காது ஒத்துழைக்கும் துணைவியாகவும் விளங்கினார்.விருந்தோம்பல் பண்பில் சிறந்தவர் அன்பு ததும்பும் மலர்ந்த முகம் மங்களம் நிறைந்த சிவந்த நெடும் வதனம் பல ரக சுவையான கறிகளோடு காலை உணவாக அவர் கை குழைத்த பழஞ்சோற்றை கவனமாக கையிலேந்தி உண்ட சுவையின்றும் மனதில் நின்று இனிக்கிறது.

காந்திய இயக்க பாலர் பாடசாலைகளை நாம் இயக்கிய காலத்தில் சுமூகலிங்கம் பூநகரி பொறுப்பாளர் உறவு நெருக்கமாகி தொடரானது. இவர் தம்பியர் இருவர் எனது ஊரான தெல்லிபளையில் மகாயனா கல்லூரியில் கல்விக்காக தங்கி படித்தது தம்பி கருணா கூட்டுறவு பள்ளி படிப்புக்காக எம்மோடு கிளிநொச்சியில் தங்கியது இடைப்போக நெற்செய்கையை என் காணியில் இடைஇடை சுமூகன் மேற்கொண்டது. பேரன் குருஎம் அழைப்பில் லண்டன் வந்து இங்கு அம்மன் கோயில் பணியை மூன்று ஆண்டுகள் தொடர்ந்தது என தலைமுறை கடந்து உறவாக எம் நட்பு நிலைக்கிறது. என் காதல் மனையாளும் கூட காந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பள்ளி காலம் முதல் இவர்களோடு ஐக்கியப்பட்டவர் சுமுகனின் நண்பர்கள் என் நண்பர்கள் இவர் நண்பர்கள் என உறவு வட்டம் விரிந்தது. "தக்கார் தகவிலார்" என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் என்ற வள்ளுவ வாக்கிற்கு அமைய பிள்ளைகளின் குண இயல்புகளூடாகவே அம்மாவின் பெருமை விளங்குகிறது. எளிமையான படோபமற்ற வாழ்வில் தன்னிறைவை கண்டவர் அறநெறி நின்று "அன்புடையார் தம் என்பும் ஈவர் பிறர்க்கு" என்ற வாழ்வு நெறியில் தன் கணவரோடும் பிள்ளைகளோடும் மனநிறைவாக வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர். இத்தகைய புண்ணிய அம்மாவின் ஆத்ம வானுலகில் தெய்வத்தோடு இணையும் என்பதில் ஐயமில்லை.ஆத்ம சாந்திக்கு அஞ்சலிக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி

ப.வை ஜெயபாலன்
கமலா ஜெயபாலன்
லண்டன்
22.04.2022.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பொக்கிசம்

எங்கள் குடும்ப குலவிளக்காய் திகழ்ந்த சிவனருளே அருள் சிவஞான தெளவே தெளவு சிவ சிவ என்று சிரசிலே வீபூதியிட்டு நெற்றியிலே சிவாயநம, என நீறணிந்து காலை சந்தி மாலை மூன்று வேளையும் மேற்படி கோலத்துடன் லட்சுமிகரமாக காட்சி தருவார். எனது பேரன்புக்குரிய மாமி செல்வலட்சுமி அம்மா அவர்கள் ஊரவர்கள் உற்றவர்கள் எல்லோரும் அம்மா என்ற வார்த்தையால்த்தான் அவரை அழைப்பார்கள் அன்புக்கு முதன்மையானவர் அம்மா மட்டும் தான் அம்மா என்ற சொல்லுக்கு இலக்கணமாகத்திகழ்ந்து உலகிற்கு வாழ்ந்தவர்கள் எனது மாமா மாமி என்றால் மிகையாகாது இருவரும் மன மொருமித்த வாழ்க்கை வாழ்ந்தமையால்தான் அவர்கள் இருவரையும் எல்லோருமே அவர்கள் மேல் கொண்ட பிரிவின் நிமித்தம் இரு வார்த்தைகளின் பரிசு தான் அம்மா ஐயா என்று கண்கண்ட தெய்வங்களின் அன்பின் அரவணைப்பாகும். இப்பேறு வேறு யாருக்கம் கிடையாது

நடமாடும் கோயில்களான உயிரினங்களுக்கு செய்யும் தொண்டே மிகச்சிறந்தது. என்ற திருமூலர் வாக்கை தன்சிரமேற் கொண்டார். அதற்கு அமைவாக திருமந்திரம் கூறும்

படமாடும் கோயில் பகவற்கொண்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங்கு ஆகா
நடமாடுழ் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடும் கோயில் கோயில் பகவற்கு ஆகாமே

இப்பாடலே அன்னமிட்டுண் வாழ்க்கையை வாழ்ந்து காட்டி இறுதியாக சிவனடி சேரும் காலம் நெருங்க தன் அமைதியான ஆனந்த பெரு வாழ்வை தழுவிக்கொண்டார்

செல்வத்துள்செல்வம் அருள்ச்செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணிலும் உள என்ற வள்ளுவர் வாழ்க்கை நிலை நிறுத்தி பூதவுடலை உகுத்து தேகவியோகமானார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மருமகள்-
இராசேஸ்வரி,
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுதற்கரிய பேறு பெற்றவர்

அன்று ஒரு நாள் கடமை நிமித்தம் பொன்னாவளி சென்று கொண்டிருக்கின்ற போது வேரவில் வீதியோரமாக வெள்ளை வேட்டி அணிந்து உடல் முழுவதும் திரிபுண்டரமாக வீபூதி தரித்து கையிலே பூஜை பொருளுடன் செல்லும் ஒருவரை கண்ணுற்றேன். யாரென நினைக்கும் போது அமரர் குமாரசாமி ஐயா வெள்ளி பள்ளத்து விநாயகருக்கு பூஜை ஆராதனை செய்யுமுகமாக செல்வதாகவும் சென்று கொண்டிருப்பதையும் வழக்கமாக கொண்டிருந்ததனை அறிய முடிந்தது. இத்தனைக்கும் இவர் வேறு இடங்களுக்கு செல்லாது சைவத்தையும் தமிழையும் வளர்த்தமையானது அவர் தம் பாரியாரான அமரர் குமாரசாமி செல்வலட்சுமி பெயருக்கு அமைந்தாற் போல்ஏழு ஆண்பிள்ளை செல்வங்களை பெற்றிருந்த போதும் பெண்பிள்ளைகள் இல்லாத குறைபாடு இருந்தாலும் வீட்டிற்கும் சமூகத்திற்கும் இவருடைய உந்து சக்தி காரணமாய் இருந்ததையும் பின் நாளில் அவர்களுடைய பிள்ளைகள்சமய பெரியார்களாயும்தொழில் வல்லுனர்களாகவும் அந்தணர் சிவாசாரிகளாகவும் வழித்தோன்றல்களாக பேரக்குழந்தைகளும் தோற்றம் பெற்றிருப்பதனை இலக்காக கொண்டு அவர் செயற்பட்டிருப்பதனை யாவரும் ஏற்றுக்கொள்ள கூடியவாறு இருக்கின்றது.

பூநகரி செட்டிய குறிச்சி வன்னேரியில் ஆரம்ப,இடைநிலை கல்வியினைக்கற்று வேரவிகில் திருமணபந்தத்தில் இணைந்து அமரராகும் வரையில் அவருடைய பணியானது வீட்டிற்கு நல்ல மனையாளாகவும், பிள்ளைகளுக்கும் அடுத்த சந்ததிகளுக்கும் நல்ல வழிகாட்டியாகவும், சமூகத்திற்கும் சமூக தொண்டாற்றி இருந்தமையானது அவர் வாழ்ந்த வாழ்க்கை முறைமை சைவ நெறியை பின்பற்றியமை குறைவில்லாத செல்வ செழிப்புக்கும் நோயற்ற நீண்ட ஆயுள், கொண்டு வாழ்ந்தமையானது அவர் தம் கடவுள் பக்தி நல்ல நெறி முறை உற்றார். சுற்றத்தாருக்கும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாடு சைவ பாரம்பரியத்தை சந்ததியினருக்கு ஊடுகடத்தியமை அவர் தம் பிள்ளை செல்வங்களுக்கும் அடுத்த தலை முறையினருக்கும். எடுத்துக்காட்டாக வாழ்ந்திருப்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாக அவர்தம் பிள்ளைகள் ஊடாக அறிய முடிகின்றது. "எந்தக்குழந்தையும் நல்லகுழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலே" இத்தனைக்கும் அவருடைய ஊர் சூழல் புறங்நடையாக இருந்த போதும் நெறிமுறை தவறி செல்லாமல் இருப்பதற்கான கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையை அமைத்தமை யானது பெறுதற்கரிய பேறு பெற்றவராகவும் நல்ல சமுதாய சிற்பங்களையும் சமய பிரசங்கி சமய ஒழுக்க நெறிகளையும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கக் கூடிய சொற் பொழிவாக்கங்களாகவும் கருணை, அன்பு, விடாமுயற்சி,ஒத்துழை பண்புகளை கொண்ட ஆரோக்கியமான சமுதாயத்தை இவ்வுலகிற்கு விட்டு சென்றிருக்கின்றார். என்பதை அவருடைய வாழ்க்கை தத்துவங்கள் மூலமாக அறிய முடிகின்றது "பிறப்புண்டேல் இறப்புண்டு" என்பது உலக நியதி இந்நியதிக்கு உட்பட்டு அவர் ஆண்டவரின் பாதத்தில் சாந்தி அடையவும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் ஆத்ம பலத்தையும் வேண்டி நிறைவு செய்து கொள்கிறேன்.

த.இரவீந்திரன்,
முன்னாள் அதிபர்
ஜெயபுரம்,
பல்லவராயன்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லோர் மனங்களிலும் நிறைந்தவர் செல்வலட்சுமி அம்மா அவர்கள்

வேரவில் கிராமத்தில் வாழ்ந்த சிறப்பான குடும்பங்களில் குமாரசாமி ஐயா குடும்பம் என்றால் தெரியாதவர்கள் என்று ஒருவர் இல்லை எனலாம் செல்வலட்சுமி அம்மா அவர்கள் குமாரசாமி ஐயா அவர்களுடன் இணைந்து அரிய பல பணிகள் புரிந்துள்ளா.இப்பிரதேச சிவாலயங்களின் பூசைவழிபாடுகளை நெறிப்படுத்தி சீராய் இயங்கச்செய்த பெருமையுடையவர் அதுமட்டுமன்றி பாடசாலை,ஆலயம்,வீடு என்பன ஒரே நேர் கொண்ட பார்வையில் பாக்க வேண்டும் என்பது அவர்களின் சிந்தனையாகும்.அதே போன்று அவர் இல்லத்துக்குச் செல்லும் போதெல்லாம் முன்னைய காலத்தில் வேறு வசதிகள் இக்கிராமத்திற்கு இல்லை என்றே கூறலாம். புதிதாக பாடசாலை வரும் ஆசிரியர்கள் அரசினர் வைத்தியசாலை வரும் உத்தியோகத்தர்கள் சமயாசரசீலர்கள் எல்லோருமே அவர்கள் இல்லத்திலே தான் இளைப்பாறுவார்கள்.சைவப்பண்போடு பேணிக்காப்பதில் வல்லவா் தாம். வாழ்ந்த கிராமத்து ஆலயங்கள் சிறப்பாக பேணி வந்தனர். அதேபோன்று அயற்கிராம ஆலயங்களையும் சீர்தூக்கிபார்த்தனர். அவர்களின் பிள்ளைகளும் அவ்வழியே அம்மா அவர்களின் நெறிப்படுத்தலுடன் பலபணிகள் செய்துள்ளனர்.2012ம் ஆண்டு ஐயா அவர்கள் தேகவியோகம் அடைந்த பின்னரும் தமது பணியை இடைவிடாது செய்யத்தூண்டுகோலாக அமைந்தார்.

6ம் வாய்க்கால் மருதநிலம் மாணிக்கபிள்ளையார் ஆலயம்,திக்குவில்,பல்லவராயன்கட்டு,வெள்ளாங்களம்,பள்ளமடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இடங்களில் சிவாலயங்கள் அமைத்து அப்பகுதி மக்களின் வழிபாட்டுக்கு உதவி செய்துள்ளனர். இவர்களின் பணி அளப்பரியது. இவரின் இறுதிக்காலம் பழனி அவர்களின் வீட்டில் இரந்த காரணத்தால் என்னுடன் அதீதமாக பழகி எனது மனதிற்கு பிடித்த அன்னையாக திகழ்ந்தார்.நோய் வாய்ப்பட்டு கண்இமைப்பதற்கிடையே இறைபதம் அடைந்தார் என்ற செய்தி எங்கும் பரவியது. ஊர் மக்கள் ஒவவொருவரும் அம்மாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செய்த காட்சி என் நெஞ்சை உருக்கியது. இருப்பினும் பூவுலக வாழ்க்கை நிறைவுறும் காலம் வரும் போது யாரும் தடை செய்ய முடியாது. நாம் எலலோரும் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

பொ.சிவசாமி
மாதிரிக்கிராமம்
பல்லவராயன்கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயு மறைந்தும் மறையாத மாண்புயர் பாவை

எண்ணுதற்கு அரிய எண்ணொரு கணக்கில் மண்ணுயர் உலகில் மனிதரென்று உதிக்கும் உலகோரின் காலத்தால் அழியாத ஞாலப்புகழ்மிக்க சாலச்சிறந்த சாண்றாண்மைப் பண்புடன் வாழ்ந்து மறைந்தும் மறையாத மாண்பொடு திகழ்வோர் விரல்விட்டு எண்ணத்தக்க எண்ணிக்கையினரே அந்தவகையிலே அன்புள்ளங்கொண்டவராய் பழிபாவங்களுக்கு நாணுபவராய் ஒப்பரவாம் சமத்துவ நிதியைச் சமைத்திடுவோராய் தொடர்புடையார் மீது அரும்பரிவுள்ளவராய் வாய்மையென்னம் தூய்மையென்னம்தூய்மை கொண்டவராய் உயர்சாண்றாண்மைப் பண்போடு உலகில் உலகிய திருவாட்டியாம் செல்வலட்சுமி என்னம் நல்லோர் ஆன்மிகம்போற்றி அரும்பணி ஆற்றிய குமாரசாமி நல்லோரின் இல்லத்தரசியாய் இயங்கி நின்றார். அத்துடன் போற்றத்தக்க நடுநிலையாளராய் வாழ்ந்து பெருமை பெற்று மறைநத்தும் மறையாத சிறந்ததாம் நிலையில் நிறைந்தமைகின்றார். ஆம்

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சதால் காணப்படும்"

என்ற பொய்யாமொழி இலக்கணத்திற்கு இலக்கியமாக இலங்கி நின்றார். அந்த வகையிலே நல்லறிவும் ஆன்மீகப்பண்பும் ஒருங்கே கைவரப்பெற்ற திருவாளர் சுமூகலிங்கம் ஆசான் போன்றோரை நன்மக்களாய் நயந்து அவர்களது பெருமையையும் நல்லோர் போற்ற அறிந்து மக்களைப்பெற்றபோது உற்ற பெருமகிழ்விலும் மேலான் மகிழ்வதனை பெற்று நின்றார்.

மனைத்தக்க மாண்புடைய மாதரசி செல்வலட்சுமி நல்லோர் வந்தோரை வரவேற்று ஏற்றனர். ஆற்றி இனிதே
போற்றி இன்மொழிஇன்மொழியுடன் நன்மொழி நவிலும் நல்லோரையும் விளங்கிய தன்மைதனை ஒருமுறை அன்னாரது வேரவில் இல்லத்திற்கு ஏகிய போது அடியேன் அறிந்துகொண்டேன். போற்றத்தக்க சிறப்போடு வாழ்ந்த பூவையரான செல்வலட்சுமியார் இப்போது இயற்கை எய்தினாலும் அன்னவர் ஆற்றிய அருஞ்செயல்கள் அவரது பெருமையை என்றென்று நன்றே பறைசாற்றி நிற்கும். அவர் பரிவால் அவதியுறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலோடு தேறுதல் கூறி அன்னவர் ஆத்மா இன்னருள் எய்த பொன்னவன் ஆன என்னரும் ஈசன் தன்னடி அதனை ஏற்றிப் போற்றிக்கொள்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்**
ஓய்வு நிலை அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரவில் கிராமத்தின் அட்ஷய பாத்திரம்

மாதா,பிதா,குரு, தெய்வம் என்ற நான்கு தலைமைகளில் முதன்மை நிலையாக அனைவராலும் புகழப்படுகின்ற மாதா என்ற அருள் வார்த்தைக்கு அர்த்தமாக திகழ்ந்தவர் அன்னை குமாரசாமி அவர்கள்

அன்னார் கடந்த 7.4.2022 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது இழப்பு செய்தி அறிந்ததும் அவர் வாழ்ந்த இடத்து மக்கள் அனைவரும் ஆறாத்துயரில் ஆழ்ந்தனர்.


அவர் தனது பிறந்த இடத்தில் இருந்து வேரவில் என்னும் பழம் பெரும் கிராமத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்த அவர் கதிரவேலு குமாரசாமி என்பவரை திருமணம் செய்து வந்த நாட்தொடக்கம் தனது கணவரின் ஊரவர்களை தன் ஊரவர்கள் போல மதித்து வள்ளுவன் கூறிய 'விருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மைப் பொருட்டு' என்ற குறளுக்கு அமைவாக வாழ்ந்து காட்டியவர்எமது கிளி வேரவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு வந்த ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் அவரது விருந்தோம்பலின் சிறப்பை பல்வேறு இடங்களிலும் சிறப்பித்து கூறுவதைக்கேட்கும் போதெல்லாம் அவரின் சிறப்பு பரந்து விரிந்து காணப்படுகிறது. அன்னார் ஏழு ஆண்பிள்ளைகளை பெற்றெடுத்து அவர்கள் அனைவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்து தான் வையத்தில் பிறந்ததின் கடமையை இனிதே நிறைவு செய்து இறைபதம் அடைந்து விட்டார் அன்னாரின் இறப்பு எமது பாடசாலைக்கும் இப்பிரதேசத்திற்கும் பேரிழப்பாகும். அவரின் பிரிவால்துயரிற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

**ஐ.கேசவன்**
அதிபர்
கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயம்
வேரவில்,பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னேரீஸ்வரர் சிவன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தின் அருள் விளக்கு

அமரர் திருமதி குமாரசாமி செல்வலட்சுமி மறைவு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை வேரவில் என்றால் ஞாபகத்திற்கு வருவது குமாரசாமி குடும்பம்தான் "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வள்ளவர் வாக்கின்படி வாழ்ந்தவர்கள்

அன்பு இரக்கம் ஈகை விருந்தோம்பல் அருள், அமைதி போன்ற பல்வேறு இனிய குணம் கொணண்டவர் இவ்வம்மையார் வீட்டிற்கு வரும் விருந்தினர் உணவருந்தாமல் வெளியேற முடியாது இவ்வாறு அன்பாக அரவணைத்து விருந்தோம்பல் செய்வார். "தற்காத்து தற்கொண்டாற் பேணி தகை சாண்ற சொற்காத்த சோரிவிலாள் பெண்" தன்னையும் கற்பு நெறியில் காத்து கணவனையும் காப்பாற்றி புகழொடு வாழ்ந்தவர் இவ்வம்மையார்

வேரவில் ம.வி என்ற பாடசாலையில் இன்றைய பெருமைக்கு முன்னைய காலத்தில் அத்திவாரம் இட்டவர்கள் குமாரசாமி குடும்பத்தினர் இதில் விருந்தோம்பல் மிக பிரதான விடயம் அன்றைய காலத்தில் தூரப்பிரதேசத்தில் இருந்து வரும் அதிபர் ஆசிரியர்களுக்கு உணவும் உறக்கமும் வழங்கிய பெருமை செல்வலட்சுமியைச் சேரும்

"அகமுகந்து செய்யான் உறையும் முகமாந்து நல்விருந்து ஓம்புவான் இல்" என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய முகமலர்ந்து விருந்தோம்பியவர்கள் இவ்வாறு அக்கிராமத்து மக்களையும் கொள்ளை கொண்டவர்

"அருட்செல்வம் செல்வத்துச்செல்வம் பொருட்செல்வம் பூமியார் கண்ணும் உள என்ற குறளிற்கமைய கடவுள் பக்தியுடன் வேரவில் பகுதியில் பிள்ளையார் கோயில் அமைத்து கோயில் தொண்டுகளிலும் ஈடுபட்டனர் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற வள்ளுவர் வார்த்தையில் வாழ்ந்தவர்.

இவ்வம்மையார் தான் பெற்ற அருளால் பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் இடையூறுகள் இன்றி மின்னாமல் முழங்காமல் சென்றமை அதிர்ச்சியூட்டும் செய்திதான். ஆனால் ஆண்டவன் கட்டளை என எண்ணி ஆறுதலடைவோம்.

திருமதி. ஜெ.தனபாலசிங்கம்
அதிபர்
கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்த மண்டபத்தில் திருவிழாக் காலங்களில் ஓத வேண்டிய பஞ்ச தோத்திரங்கள்

### 01. ஞாயிற்றுக்கிழமை

#### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

உருவமும் உயிருமாகி ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்ற வெம்பெருமான் மிக்க
அருவிபொன்சொரியும் அண்ணாமலையுளாய் அண்டர் கோவே
மருவிநின் பாத மல்லால் மற்றொரு மாடிலேனே. 1

#### திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி
னாற் கலந் தாண்டு கொண்ட
விடையவனே விட்டுடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னு முத்தர
கோசமங் கைக் கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக் கொள்ளே. 2

#### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
ஐகயாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. 3

#### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான் முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அண்ணலே யெனையாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணிநாதன் தொழநயத் தருள்புரி எனப்பணித்தார். 5

## திருப்புகழ்

மதியால்வித் தகராகி மனதாலுந் தமதான
பதியாகிச் சிவஞான பரபோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேரே நினைவோர் சொற் பொருள்வேலா
கதியே சொற் புலவோனே கதிர்காமப் பெருமானே

திருச்சிற்றம்பலம்

# 02. திங்கட்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூரரனே. 1

## திருவாசகம்

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினதடியாரொடு அல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே.
2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தே யென்ன வண்டுபாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்தன் ஆடல் காண அணைவதும் என்று கொலோ.
3

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதிக்க தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின்கீழ் இருக்க என்றார். 5

## திருப்புகழ்

கருவினுரு வாகிவந்த வயதளவி லேவளர்ந்து
கலைகள் பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினையாமல் நின்று
அறுசமய நீதியொன்று அறியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அனுதினமு நாணமின்றி அழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியடிபெரு மாளரங்கர்
உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒரு பொழுது தூது சென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதிநின்ற பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## 03. செவ்வாய்க்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ ன்னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த் தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவாலவாய திருவாரூரா
ஒரு பற்றிலா மையும் கண்டிரங்காய் கச்சியே கம்பனே. 1

### திருவாசகம்

அன்றே யெந்தன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்றும் நான் மறக்கேன்
முன்னம்மா லறியா வொருவனாம் மிருவா
முக்கண்ணா நாற்பெருந் தடந் தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோழேச்சரத்தானே. 3

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துக்குள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனித வாய் மலந்தழுத
சீதவள வயற் புகலி திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 5

## திருப்புகழ்

உம்பர் தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதற் றுணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற்றருள் வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி தனக்காக வனத் தனைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானைமுகப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

## 04. புதன்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்தே. 1

### திருவாசகம்

வழங்கு கின்றாய்க் குன் னருளா
ரமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினை
யே னென் விதியின்மை யால்
தழுங்கருத் தேனன்ன தண்ணீர்
பருகத் தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 2

### திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனி படர்ந்தனையை தோர்
படரொளி தரு திரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்று
பொற்குழல் திருச் சடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவள மாளிகை சூழ் தரு தில்லையில்
திரு நடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் எம்மனம்
தழல் மெழுகு ஒதுகின்றதே." 3

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு
அண்டைத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும் நாமமும்
தொண்டற்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார். 5

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள் சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. வியாழக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரம் தரவேண்டும் இவ் வையத்தே
தொழு வார்கிரங்கி யிருந்தருள் செய் பாதிரிப் புலியூர்ச்
செழு நீர்ப்புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீ வண்ணனே 1

## திருவாசகம்

முத்தனே முதல் வா முக்கண்ணா முனிவா
மொட்டறா மலர் பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத்திருப் பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே 2

## திருவிசைப்பா

தனதனத் தோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனக நற்தூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடைய தோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமர சேகரனே
உனகழல் இணை உன் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே 4

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள் 5

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மா திருப்புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மா மணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.


திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. வெள்ளிக்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அல்ல லென் செயும் அருவினை யென் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென் செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பல வனார்க்கு
எல்லையில்ல தோர் அடிமை பூண்டேனுக்கே 1

### திருவாசகம்

வினைப்பிறவி யென்கின்ற வேதனையிலகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே தளர் வெய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழும் தில்லையம்பலத்தே கண்டேனே. 2

### திருவிசைப்பா

கடியார் கணம் புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமர் உலகம் ஆள நீ ஆளாதே
முடியா முத் தீவேள்வி மூவாயிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக் கூத் தாடினையே 3

### திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகு திருவாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ் செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார். 5

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே!
திருச்சிற்றம்பலம்

# 07. சனிக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பொடிகொண் மேனியர் புலிய தளரையினர்
விரிதரு கரந்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிகளாதரித் திருந்த கேதீச்சரம்
பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்ந்தடி பேண வல்லார் தம் மேல்
மொய்த் தெழும் வினைபோமே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

செங்க ணெடு மாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தோ போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தர முமாட் கொண்டு
தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாயறை கூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்
2

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவகை யாயூர்ந்த
மேகநாயகனை யன்றி மற்றொன்றும்
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே 3

## திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையென
கூவிக் கவரந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்ய பாத
முன்னி மிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாக் கிழி பெற்றார் உவகையுற்றார். 5

## திருப்புகழ்

அதிருங் கழல் பணிந்து னடியேனுன்
அபயம் புகுவதென்று நிலை காண
இதயந் தனிலிருந்து கருப்பையாகி
இடர்சங் கைகள் கலங்க அருள்வாயே
எதிரங் கொருவரன்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா
பதியெங்கிலு மிருந்து விளையாடிப்
பல குன்றிலு மமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியைகளின் போது இணைந்து பயன்படும் திருமுறைப்பாடல்கள்.

திருச்சிற்றம்பலம்

### முதல் திருமுறை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

### இரண்டாம் திருமுறை

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதம்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கை நன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்க ளேத்தும் ஒலி புனற் காழிநன் னகரே

### மூன்றாம் திருமுறை

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதம்
திரிய இல் பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்களேத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே

### நான்காம் திருமுறை

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி யென்னும் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

### ஐந்தாம் திருமுறை

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனின் தானோர் தலைமகன்
என்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயிலாளரே

### ஆறாம் திருமுறை

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசை முகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலும்
அடியேனை யாளுடைய அடிகள் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏழாம் திருமுறை

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசுங்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கொற்றட்டி குமரன் பிள்ளை
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் றளியுளீரே

### எட்டாம் திருமுறை

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்முன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர்சே கரனே
நுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே

### ஒன்பதாம் திருமுறை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் -உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

### பத்தாம் திருமுறை

மண்ணுல கத்தனில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

எடுக்கு மாக்கதை இன்றமிழ்ச் செயுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரியைகளின் போது ஓதத் தகுந்த (திருமுறையல்லாத) வேறும் சில விநாயகர் துதிப்பாடல்கள்

கடக்கதிருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப்பிள்ளையைப் பேணுவாம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்த

அல்லலர் போம் வல்வினை போம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் விற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கதவம் திறக்கும் திருப்பாடல் மஹா கும்பாபிஷேகம் நிறைவு பெற்றதும் தச தர்சனத்தின் போது பாடப்படுவது**

திருச்சிற்றம்பலம்.

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார்வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்டகார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புருஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வம்திறப் பரமரோ
சட்ட இக்கத வம்திறப் பிம்மினே

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வம்திறப் பிம்மினே

அரிய நான்மறை ஓதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
வலையில் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வம்துணை நீக்குமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கும் தாழை புறணி யருகெலாம்
ஆக்கமத் தண்பொழில் சூழ்மறைக்காடரோ
ஆர்க்கும் காண்பரியீர் அடிகேள் உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே

வெந்த வெண்பொடி பூசும் விகிர்தரோ'
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார் வந்திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெருமானிந்த
மாறிலாக்கத வம்வலி நீக்குமே

சுண்ண வெண்பொடி பூசும் கவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே

விண்ணு ளார்விரும்பியெதிர் கொள்ளவே
மண்ணுளார் வணங்கும் மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே

அரக்கனை விரலா லடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானீரே.
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ காலத் திருமுறைகள்

மஹோற்சவத்தின் போது தம்பத்தடியில் ஓதப்படவேண்டிய திருமுறைகள்.

பண்-தக்கராகம் கணபதி தாளம் இராகம்-காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவு மென்கொலோ- சம்பந்தர்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்ச்சடை சுற்றி முடித்து
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தோவர்
அணிவளர் கோலம் எலாம் செய்து
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ,இவர் மாண்பே? - சம்பந்தர்

மாந்தர் தம் பானறு நெய்மகிழ்ந் தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழ றாளமொர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தார் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர் செய்வதோ விவர் சார்வே- சம்பந்தர்

மத்தம் மத யானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யோர் பெண்ணைவடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தாவுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே-சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஷிகதாளம்-விநாயகருக்கு விருஷப தாளம்-சிவன்,அம்பாள்
பண்-காந்தார பஞ்சமம் இராகம்-கேதாரகௌவை

இடரினும் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழல் தொழு தெழுவேன்
கடல்தனி லமுதோடு கலந்த நஞ்சை
மிடறினிலடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே - சம்பந்தர்

துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே -சம்பந்தர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக் கற்றுணைப்
பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே - அப்பர்

பிழைத்த பிழையொன் றறியேனான் பிழையைத் தீரப் பணியாயேய
மழைக்கண்நல்லார் குஜடுந்தாடமலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் சுழனிமண்டிக்கையெறி
அழைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ-
சுந்தரர்

சிம்மதாளம்-அம்பாள் பண்-நட்டபாடை இராகம்-கம்பீரநாட்டை

மையாடிய கண்டன்மலை மகள் பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடியஒருவன
செய்யாடிய குவளைம் மலர் நயனத் தவளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே.

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின்கரைமேல்
செத்தாரெலும்: பணிவான்திருக்கேதீச்சரத்தானே- சுந்தரர்

அங்கம்மொழி அன்னாரவ ரமவர் தொழுதேத்த
வங்கம்மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பஞ்கங்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும்: பணிவான்திருக் கேதீச்சரத்தானே

விண்ணிலான பிறைசூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினால்தங்கன்னுடலம் பொடியாக்கினார்
பண்ணி லானவிசை பாடன்மல் குந்திருவாஞ்சியத்
தண்ணலார் தம்மடிபோற்ற வல்லார்க்கில்லை யல்லலே- சம்பந்தர்

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டு கொ லாமிலங்குங்குழை பெண்ணான்
இரண்டு கொ லாமுரு வஞ:சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே- அப்பர்

தலைக்கு தலை மாலை அணிந்தத தென்னே
சடைமேற் கங்கை வெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டசைத்த தெனனே
அதன் மேற் கதநாகங்கச் சார்த்த தென்னே
மலைக்கு நிகர் ஒப்பனவன் திரைகள்
வலித்தெற் றீமுழங் கிவலம் புரிகொண்
டலைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ் சைக்களத் தப்பனே - சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையாய் எனுமால்சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உண் மெலிவே - சம்பந்தர்

பித்தாப்பிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரட்டுறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லே னெனலாமே. - சுந்தரர்

**கொடிக்கவி**

**கொடியேற்றத்திற்கு ஆயத்தமானதும் பாடப்படுவது**

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே யிடம்ஒன்று மேவிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும்: படிக்கொடி கட்டினனே

பொருளாம் பொருளேது போதேது கண்ஏது
இருளாம் வெளியேது இரவேது- அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை -நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

அஞ்செழுத்தும்: எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெருவெழுத்தும்- நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி

உமாபதிச்சிவாச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசந்திகளில் ஓத வேண்டிய தேவாரப் பண்கள்

பண்-மேகராகக்குறிஞ்சி இராகம் -நீலாம்பரி

பிரம்ம சந்தி

அன்னம்மலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம் பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாபவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையால் இவை பத்தும் இசையுஞ்கால்ஈசனடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே- சம்பந்தர்

செல்வ மல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர் மேற்சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன் செந்தமிழ்
செல்வமாய் இவை செப்பவே- சம்பந்தர்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டைம்மேலுந்தி
அலமந்த போதர்க அஞ்சேலென் றருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ:சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே -
சம்பந்தர்

இந்திர சந்தி பண்-காந்தாரம் இராகம்-நவரோஸ்

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நிறுபெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே - சம்பந்தர்

சுண்ணவெண்சந்தனச்சாந்தும் சுடர்த் திங்கட் சூளாமணியும்:
வண்ண உரிவை யுடையும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும் அகலம் வளாய வரவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணன் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லைல அஞ்ச வருவதுமில்லை- அப்பர்

மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையுந் தோத்திரதத்திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனலானைக் காவுடை யாதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே- சுந்தரர்

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே-- அப்பர்

மாதர் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீசுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாரடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும்களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்- அப்பர்

**அக்கினி சந்தி பண்- கொல்லி இராகம்- நவரோஸ்**
சந்தமார் அகிலொடு சாதிதேக்கமரம்
உந்தும முகலியின் கரையினில உமையோடு
பந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே - சம்பந்தர்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும்: ஓர் குறைவு இல்லை
கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே- சம்பந்தர்

கூற்றாயினவாறு விலக் ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே
தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்பினுந் தொண்டர் தருகிலாப
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலுவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள் வதற்
கியாதும் ஐயுற வில்லையே-- சுந்தரர்

யமசந்தி பண்-கௌசிகம் இராகம்- பைரவி
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே- சம்பந்தர்

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினம் மெய்பொருளாவது
நாதன் நாம நமச்சிவாயவே- சம்பந்தர்

குற்றம் நீ குணங்கள் நீ கூடலால வாயிலாய்
சுற்றம் பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்றநூல் கருத்தும் நீஅருத்தமின்ப மென்றிவை
முற்றும் புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே- அப்பர்

இயமன் தூதரு மஞ்சுவர்இன்சொலால்
நயம்வந்தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சிவாயவே- சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருதி சாந்தி பண்- நட்டபாடை இராகம்கம்பீரநாட்டை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்வருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே- சம்பந்தர்

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும் விரி சாரல்
அம்புந்திமூ எயிலெய்தவன் அண்ணாமலையதனைக்
கொம்புந்துவு குயிலாலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே- சம்பந்தர்

பண்ணின் தமிழிசை பாடலின் பழவேய் முழவதிரக்
கண்ணின் ஒளிகனகச் சுனை வயிரமவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக் கொண்டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதார மெனீரே- சுந்தரர்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணணணணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே -
சம்பந்தர்

**வருண சந்தி பண்-சீகாமரம் இராகம்-நாதநாமக்கிரியை**

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கடடிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஓட்டிட்ட பண்பின் னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணோதே போதியோ பூம்பாவாய்- சம்பந்தர்

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கதல்
பழியதனைப்பாராதே படலம் என்கண் மறைப்பித்தாயயய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையடையான் உள்ளிருந்து உளோம் போகீர் என்றானே- சம்பந்தர்

கண்காட்டும் நுதலானும்
கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானம்
பண்காட்டும் இசையானும்
பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும்
விடைகாட்டும் கொடியானே- சம்பந்தர்

**வாயு சந்திபண்- தக்கேசி இராகம்-காம்போதி**

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவென நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே- சம்பந்தர்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலனறன் ஆருயிரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூருளானே- சுந்தரர்

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம் தான் பெரிதும் உடையானைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பார் அவர் சிறந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே- சுந்தரர்

பூவார் மலர்கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க் கருள்செய்தார்.
தூமா மழைநின் றதிர வெருவி தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையும் சாரல் அண்ணாமலையாரே-சம்பந்தர்

**குபேர சாந்தி பண்-தக்கராளம் இராகம்-காம்போதி**

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர் திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண் உமை பாகம்
ஆயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம் சம்பந்தர்

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர்ப் பங்கயமாகச் சிறந்தானுக் கருவி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறையவன் ஊர்வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழவு ஒலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்
களிவண்டின் கணம் இரியும் கலயநல்லூர் காணே--சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்ச்சடை சுற்றி முடித்து
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலம் எலாம் செய்து
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர்மாண்பே- சம்பந்தர்

**ஈசான சந்தி பண்-சாலாபாணி இராகம்-பந்துவராளி**

பாடன் மறை சூடான் மதி பால்வளையொர்
பாகமதின் முன்றொர் கணையால்
கூடவெரியூட்டியெழில் காட்டி நிழல்
கூட்டு பொழில் சூழ்பழைசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே- சம்பந்தர்

திடமலிமதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீர் உமைப்பணிபவர்
அடைவதும் அமருலகதுவே- அப்பர்

தலையே நீ வணங்காய்
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந்தலைவனைத்
தலையே நீவணங்காய்- அப்பர்

எந்தமது சிந்தை பரியாத பெருமா னெனஇறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்ய வளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்றஅழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பை நகரே-
சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிலும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையுங் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (1)

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந்த தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியானா தநல் வேலன்றாதை
எந்தரம் ஆளுமை யான்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்தும்நாமே (3)

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பு அணிமின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திரு ஏகம்பன் செம்பொன் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே (4)

அறுகெடுப்பார் அயனும் மரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மில் பின்பு அல்லது எடுக்க ஒட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே (5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்து ம்நாமே (6)

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (7)

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யென்னும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகுதென்னன் பெரந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (9)

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (10)

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (12)

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மொன்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே (13)

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத முந்துடிப்பச்
சேயிழை யிர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப வராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே (14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (15)

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே (16)

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மாலிவிடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே (17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தாலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிச்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடிக்
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே (18)

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடி
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே (19)

வேதமும் வேள்வியும் ஆயினர்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினர்க்குச்
சோதியும் மாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பமா யினார்க்குப்
பாதியும் மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமும் மாய்விடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே (20)

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

### உடல் கூற்று வண்ணம் குறப்புச் சந்தம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தானனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த
தந்தனதான தனதானனா

ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம் தரும் அன்புபொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து.

பனியில் ஓர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்துபு குந்திரண்டு
பதுமம் அரும்பு கமடம் இதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகள் என்ற

உருவமும்ஆகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள்சேனை தரஅணை ஆடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவு ஈர் அறிவு ஆகிவளர்ந்து

ஒளி நகை ஊறல் இதழ்மட வாரும்
உவந்து முகந்திட வந்துதவழ்ந்து
மடியில் இருந்து மழலை பொழிந்து
வாஇருபோ என நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குரு உபதேசம்
முத்தமிழின்கலையும் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபதநீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க

மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர் கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர்போவது கண்டு

மனது பொறாமல் அவர்பிறகு ஓடி
மங்கல செங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதழ் அமுதுண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி

ஒருமுதல் ஆகி முதுபொருளாய்
ருந்ததனங்களும் வம்பில் இழந்து
மதனசுகந்த விதனம் இது என்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து.

வளமையும் மாறி இளமையு மாறி
வன்பல் விழுந்து இருகண்கள் இருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுமுதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்த டியும் ஆகியே.

வருவது போவது ஒருமுது கூனு
மந்தி எனும்படி குந்திநடந்து
மதியும் அழிந்து செவி திமிர் வந்து
வாய் அறியா மல்வி டாமல் மொழிந்து.

துயில்வரும் நேரம் இருமல் பெறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர்பாலர்கள் கோரணி கொண்டு

கலியுகம்மீதில் இவர்மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கலகல என்று மலசலம் வந்து
கால்வழிமேல் வழி சார நடந்து

தெளிவும் இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சும் உலைந்து மருண்டு
திடமும் அழிந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவு ஏதுஎன நொந்து.

மறையவன் வேதன் எழுதியவாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனிஎன தொந்தம்
மேதினிவாழ்வுநி லாதனி நின்ற

கடன்முறை பேசும் எனஉரை நாவு
தங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிடவந்து
பூதமும் நாலுசு வாசமும் நின்று
நெஞ்சு தடுமா றிவரும்நேரமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பிறைபோல எயிறும் உரோம
முஞ்சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்துகு னிந்தழுநொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து.

பழையவர் காணும் எனும் அயலவர்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடும்என வந்து பறையிட முந்த
வேபிணம்வேக விசாரியும் என்று.

பலரையும் ஏவி முதியவர்தாம்
இருந்தசவம்கழு வுஞ்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமேசெய்து நாறும் உடம்பை

வரிசை கெடாமல் எடும்என ஓடி
வந்துஇளமைந்தர்களுக்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து.

விறகு இடைமூடி அழல்கொடு போட
வெந்து விழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும்இ லாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டினத்தார் பாடல் :**

## மரணத்தின் போது பாடவேண்டியது

வெண்பா

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று
பையல் என்ற போதே பரிந்தெடுத்து - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி. 01

முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன். 02

வட்டிலும், தொட்டிலும் மார்மேலும், தோள் மேலும்
கட்டிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன். 03

நொந்து சுமந்து பெற்று, நோவாமல் ஏந்தி முலை
தந்து, வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திப்பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன். 04

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டு பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே! அமிர்தமே செல்வத் திரவியமே
மானே என அழைத்த வாய்க்கு. 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதலை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே! என அழைத்த வாய்க்கு. 06

## கலி விருத்தம்

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்கமூள்கவே. 07

## வெண்பா

வேகுதே தீ யதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. 08

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்துஎன்
தன்னைய ஈன்றெடுத்த தாய். 09

வீற்றிருந்தா என்னை வீதிதன லிருந்தாள்
நேற்றிருந்தாளின்று வெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும்வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டினத்தார் பாடல் :**

## உடற்கூற்று வண்ணம்

ஒருமடமாதும் ஒருவனுமாகி இன்பசுகந்தரும்
அன்பு பொருத்தி உணர்வுகலங்க ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீது கலந்து - 01

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து புகுந்து
திரண்டு பதுமவரும்பு கமடகிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற - 02

உருவமுமாகி உயிர்வளர்மாத மொன்பதுமொன்றுநி
றைந்துமடந்தை உதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து - 03

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்து கவிழ்ந்து மடமயில் கொங்கை அமுதமருந்தி
ஓரறிவு ஈரறிவாகி வளர்ந்து - 04

ஒளிநகையூற லிதழ்மடவாரு முவந்து முகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிரு கோவென நாமம் விளம்ப - 05

உடைமணியாடை அரைவடமாட உண்பவர்
தின்பவர் தங்களோடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரோ டோடிநடந்து -
அஞ்சுவயதாகி விளையாடியே - 06

உயர்தருஞான குருவுவதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து - 07

மயிர்முடிகோதி அறுபதநீல வண்டிமிர் தண்தொடை
கொண்டைபுனைந்து, மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடி வணங்க - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதனசொருபன் இவனெனமோக மங்கையர்கண்டுமருண்டு
திரண்டு, வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில்போலவர் போவது கண்டு - 09

மனதுபொறாம லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகள்கொங்கை, மருவமயங்கி இதழமுதுண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி - 10

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து, மதனசுகந்த விதனமிதுஎன்று
வாலிபகோலமும் வேறு பிரிந்து - 11

வழமையுமாறி இளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு, வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையினி லோர் தடியுமாகியே - 12

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமல்மொழிந்து - 13

துயில்வருநேரம் இருமல் பொறாது தொண்டையும் நெஞ்சும்
உலர்ந்துவறண்டு துகிலுமிழந்து சுனையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு - 14

கலியுகமீதில் இவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து - 15

தெளிவுமிரா லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமும்
உலைந்துமருண்டு, திடமும்உலைந்து மிகவுமலைந்து
தேறிந(ல்)லாதர, வேதெென நொந்து - 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமும்
என்றுதெளிந்து, இனியெனகண்டம் இனியெனதொந்தம்
ஏதினிவாழ்வுநி லாதினிநின்ற - 17

கடன்முறைபேசும் எனவுரைநாவு முழங்கிவிழுந்துரை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமுநின்று -
நெஞ்சுதடுமாறி வருநேரமே. 18

வளர்பிறைபோல எயிறும்உரோம மும்சடையும்சிறு
குஞ்சியும்விஞ்ச, மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து - 19

வலைகொடுவீசி உயிரகொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழநொந்து, மடியில்விழுந்துமனைவி புலம்ப
மாழ்கினரேஇவர் காலமறிந்து - 20

பழையவர்காணும் எனுமயலார்கள் பஞ்சு பறந்திட
நின்றவர்பந்தர் இடுமெகவந்து பறையிட முந்த
வேபிணம்வேக விசாரியும்என்று - 21

பலரையும்ஏவி முதியவர்தாம் இருந்தசவங்கழு
வும்சிலரென்று பணிதுகில்தொங்க களபமணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை - 22

வரிசைகெடாம லெடுமெனஓடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வுஎ(ன்)ன வாழ்வெனநொந்து - 23

விறகிடமூடி அழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துநிணங்கள் உருகியெலும்பு கருகியடங்கி
ஓர்பிடிநீறுமி லாதவுடம்பை -
நம்பும்அடியேனை யினியாளுமே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றிகள் ! நன்றிகள் !

**"நெஞ்சமதில் நிறுத்துகின்றோம்..."**

எமது வாழ்விற்காய் தம்மை அர்ப்பணித்து அல்லும் பகலும் எமக்காக உயிர் வாழ்ந்து இன்று அணையாத ஜோதியாய் விளங்கும் எங்கள் அன்னை **செல்வலட்சுமி குமாரசாமி** அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எம்முடன் துயர் பகிர்ந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும், அவரின் இறுதிக்கிரியைகளிற் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியைகள், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் போன்றவற்றிலும் கலந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்ட அனவருக்கும் கிரியைகளை சிறப்பாக நடாத்திய சிவாச்சாரியார்களுக்கும், இம் மலரின் ஆக்கத்துக்கு ஒத்தாசை புரிந்த இளம் சைவப்புலவர் க. கயிலவாசன் அவர்களுக்கும் அச்சிட்டு தந்த சிவகஜன் பதிப்பகத்தாருக்கும் மேலும் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்ச வி

❖கதிரவேலு
+
❖சிதம்பரம்

அமரர் ❖ சிவகாமசுந்தரவல்லி (குஞ்சுப்பிள்ளை) ❖நாகபூசனி ❖குமாரசாமி❖ திருநீலகண்டர் (தருமலிங்கம்) ❖மனோ

சுமுகலிங்கம்
+
இரத்தினேஸ்வரி
சிவஸ்ரீஹரிருவரதன் + சுயந்தினி
ஆதினி
அபிஷேகசாயினி

❖ வரதராஜன்
(ராசா)
+
வசந்தமலர்
அகிலன் + கேமறஞ்சி
ஆரங்கன்
ஆருசன்
அபிசனா
கல்ப்பனா + ஹரிகரன்
ஆதீசன்
ஆருஷா

சண்முகலிங்கம்
(செல்வம்)
+
பாக்கியலட்சுமி
❖ ஹரிகரன்
கஸ்தூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருட்சம்

❖ சுப்பையா
+
❖ சின்னத்தங்கம்

னோன்மணி | நடராசா | ❖ செல்வலட்சுமி | ❖ சபாரத்தினம் | ❖ லீலாவதி | அன்னலட்சுமி

யோகராசா
(கிளி)
+
மனோகரி
ஐங்கரன்
சர்வாணிக்கா

கதிரவேற்பிள்ளை
(பழனி)
+
❖ சாந்தி
விஷ்ணுகாந்
கேமகாந்
விமல்காந்

சண்முகதாஸன்
(கருணா)
+
தேவகி
கேனுஜா
கேனுஜன்

பரமநாதன்
(வவா)
+
றஞ்சினி
கஜானந்தவதனி
துஸ்யந்தன்
கஜவதனா

❖ - அமரர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Printed By : Sivakajan press - Kodikamam 0212050303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org